**இலங்கை பத்திரிகை பேரவையிம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பத்திரிகை பேரவையின் ("பேரவை" ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விசாலம் (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை கல்வி நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 45 ஆவது பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அனைத்து போதுமான சமமான உருப்படிகளின் வகுப்பும் வெவ்வேறாக காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 10,772,996 பெறுமதியான அலுவலக உபகரண வகுப்பிற்குள் ரூபா 5,561,263 பெறுமதியான கணனி உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் பிரகாரம் அந்த சொத்துக்களின் வகுப்பு வெவ்வேறாக காட்டுவதற்கு பேரவை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பேரவையின் ஆரம்பம் முதலே 4 சொத்துக்களின் வகுப்புக்கள் அடையாளங் காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணனி மற்றும் உபகரணங்கள், அலுவலக மற்றும் நலன்புரி உபகரணங்கள் ஆகிய சொத்துக்கள் வகுப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் கணினி உபகரணங்கள் வேறொரு சொத்து வகுப்பொன்றாக குறித்துக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 14(அ) வின் பிரகாரம், ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகளின் கிரயத்தை அடையாளப்படுத்த செய்ய வேண்டியது, உரிய சொத்துக் உருப்படி மற்றும் அண்மித்த எதிர்கால விளைவு அல்லது சேவை சாத்தியக்கூறு நிறுவனத்திற்கு உள்வருகை சாத்தியப்படக்கூடிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் தினத்திற்கு பௌதீக தன்மையில் காணப்படாத ரூபா 1,228,590 பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டிலே ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை இறக்குமதிக் கட்டுப்பாடு மூலப்பொருட்களின் பற்றாக்குறை, மற்றும் பொருட்களை விடுவித்துக் கொள்வதில் ஏற்படுகின்ற இடையூறுகள் காரணமாக வழங்குனர்களுக்கு பொருட்களை குறித்த தினத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு முடியாதிருத்தல் மற்றும் நிதியத்தை பெற்றுக் கொடுத்தல் தாமதமாகியிருந்தது.<br><br>2021 திசெம்பர் 31 இல் 2021 ஆம் ஆண்டிற்குரிய காசோலை வரையப்பட்டு காசுப்புத்தகம் மூடப்பட வேண்டியதுடன் உரிய வழங்குனரிடமிருந்து Profroma Invoice பெறப்பட்டு இந்த சொத்துக்களுக்கு உரிய காசோலை வரையப்பட்டு பேரவையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் | நியமத்தின் பிரகாரம் வருட இறுதியில் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப் பட்டுள்ள சொத்துக்கள் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் குறித்துக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்துக்கள் கிரயத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. | |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பேரவையின் தலைவருக்காக சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை ஆய்வு கொடுப்பனவான ரூபா 401,730 ஐ அட்டுறு செலவாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகள் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையின் அடிப்படையில் இந்த செலவு அட்டுறு செலவாக வகைப்படுத்தப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் பொருத்தமான மற்றும் சரியான கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் குறித்துக்காட்டும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அட்டுறு செலவுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) இன் பிரிவு | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று செயற்படவில்லை என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றை உள்ளடக்கியிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பதவியொன்றை அங்கீகரிக்குமாறு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை வரைபு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதனால் வரைபு அமைச்சிற்கு இது தொடர்பாக | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எழுத்துமூல வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 20/விவித(064) உடைய அமைச்சரவைத் தீர்மானம் 16.46(i)(இ) | பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான பேரவையின் தலைவரின் ஏழு வருடாந்த விடுமுறைகள் நிறைவடையும் 2021 சனவரி 20 ஆந் திகதியிலிருந்து யூன் மாதம் வரையான காலத்திற்குரிய தலைவரின் சம்பளமாக ரூபா 404,032 அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. | 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதி அமைச்சரவை பத்திர இலக்கம் 20/1468 /340/002 இன் விளக்கமளிக்கப்பட்டதன் பிரகாரம் அந்த காலத்திற்குள் முழுமையான கொடுப்பனவு செலுத்தப்பட்டதுடன் முழுமையான கொடுப்பனவு செலுத்தப்பட்டது தொடர்பாக அரச வியாபார திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு கிடைக்கப்பெற்ற மறுமொழியின் பிரகாரம் அதற்குப் பின்பு 50 % கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக அலுவலகக் கடிதத்தின் 01 ஆம் பந்தி மற்றும் பொது வியாபார கணக்கு சபையின் 2012 யூலை 10 ஆந் திகதிய 07 அம் இலக்க கட்டளை | பேரவை அரச கட்டிடமொன்றில் நடாத்தப்பட வேண்டிய போதிலும், பேரவை ஆரம்பம் முதலே 22 வருடங்கள் அளவான காலம் வாடகை கட்டிடங்களில் நடாத்தப்பட்டு வந்திருந்ததுடன் அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கட்டிட வாடகையாக ரூபா 29,768,800 செலவிடப்பட்டிருந்தது. | ''விசும்பாய'' வளாகத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் பேரவையின் தேவைக்கான காணி வசதிகளை வழங்கும் அடிப்படையில் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற கட்டிடத்தில் அலுவலகத்தை கொண்டு நடாத்துமாறு அமைச்சின் ஊடாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ''விசும்பாய'' வளாக அலுவலக காணியொன்றை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பின் விபர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,381,172 தொகையான நட்டமொன்று கானப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 3,973,060 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,354,233 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முன்னைய வருடத்துக்கு இணையாக சம்பளம் மற்றும் படிகள் ரூபா 6,242,193 இனால் அதிகரித்தல் பிரதான காரணங்களாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1981 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 162/5 ஏ ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின் படி, பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள பத்திரிகை கலைஞர்களுக்கான ஒழுக்க நெறிமுறை கோவைக்கு இணங்க தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளை விசாரணை செய்து பார்ப்பதற்கான முறைமையொன்று காணப்பட்ட போதிலும், பிரசுரிக்கப்படும் அளவிற்கு ஒப்பீடாக வரையறுக்கப்பட்ட விசாரணை அறிக்கை அளவொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்விசாரணை அறிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்க நெறிகளை பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்வது தொடர்பாக அடிக்கடி பேரவையின் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலே இடம்பெற்ற கொரோனா தொற்று நிலைமையின் அடிப்படையில் பல பத்திரிகை நிறுவளங்கள் “e” பத்திரிகையை மாத்திரம் வெளியிடல் விசாரணை அறிக்கை குறைவதற்கு காரணமாயின. எதிர்காலத்தில் இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் கூடுதலான அவதானம் செலுத்தப்படும். | விசாரணை அறிக்கை தொடர்பாக மற்றும் ஒழுக்க நெறிமுறைகளை பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீட்டை மேற்கொள்ளல் தொடர்பாக பணிப்பாளர் சபையின் போதுமான அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பத்திரிகைப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோருக்கு எதிராக பேரவையினால் செயற்படுத்துதல் வேண்டும். | முறைப்பாடொன்று கிடைத்தவுடன் 2 வாரத்திற்குள் பரிசீலனைகள் அழைக்கப்படுவதுடன் மேலும் 2 வாரத்திற்குள் பிரமாணத்தின் பிரகாரம் பரிசீலனைகள் ஆரம்பிக்கப்படும். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பினர்களின் | பத்திரிகை முறைப்பாடு களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்குள், செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற 33 முறைப்பாடுள் மற்றும் 2020 ஆம் ஆண்டிலே தீர்க்கப்படாதிருந்த 69 முறைப்பாடுகளும் உள்ளடங்கலாக மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 102 ஆக காணப்பட்டதுடன் அதன் 37 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | எதிர்கால விசாரணை நடவடிக்கைகளுக்காக தினத்தை பெற்றுக் கொள்ளல், பரிசீலனையின் தேவையின் அடிப்படையில் சாட்சியாளர்களை அழைத்தல், பத்திரிகை நிறுவனங்களின் முகாமைத்துவம் மாற்றமடைவதனால் ஏற்படுகின்ற தாமதங்கள் முறைப்பாடு மற்றும் பிரதிவாதி தரப்பினர் விட்டு விட்டு பங்குபற்றுதல் காரணமாக பரிசீலனைகள் பிற்போடப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு சில முறைப்பாடுகளை பரிசீலிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் முறையாக முறைப்பாட்டுக்களை முன்வைக்காமை, முறைப்பாட்டு தரப்பினர் அக்கறை இல்லாமல் விட்டுவிடுதல், முறைப்பாட்டுத் தரப்பினர் அடிக்கடி பங்குபற்றாமை காரணமாக அதற்குரிய மேலதிக பரிசீலனை நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல் மற்றும் கட்டுப்படுத்த முடியாத வேறு காரணங்களின் காரணமாக பரிசீலனை தாமதமடையும் தன்மை காணப்படுகின்றன. | |
| (ஆ) | பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் விதிகள் மற்றும் கட்டளையை தயாரித்தல்.<br><br>பதிவு செய்யப்படாத சந்தைக்கு விநியோகிக்கப்படும் பத்திரிகைத் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான விதிகள் மற்றும் கட்டளைகள் தயாரித்தல் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதிமேதகு சனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை வெளியீட்டின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டம் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகமும் உள்வாங்கும் வகையில் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் பிரகாரம் அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய அனைத்து ஊடகங்களும் உள்வாங்கும் வகையில் சட்டம் மற்றும் கட்டளையை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்யப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு பேரவை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |